அன்பு மலர் - 60
மாமலர் - ௬

பேரின்பம்

[SUPREME BLISS]

T. Venkatajalapathy,
Kumarn Kudil,
Kudal Nagar.

சுவாமி சுத்தானந்த பாரதியார்
பாடியது

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம்
புதுக்கோட்டை சமஸ்தானம்
1940

அன்பு மலர்-௰

பாமலர் - ௩

பேரின்பம்

(SUPREME BLISS)

சுவாமி சுத்தானந்த பாரதியார்

பாடியது

அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம்

பதிப்புரிமை] திருச்சி ஜில்லா [விலை அணா 4

SUPREME BLISS

Price : *As. 4*

Published by

THE ANBU NILAYAM

RÂMACHANDRAPURAM TRICHY DT.

Shakti Press Ltd., (Shanti Press), Madras.

பதிப்புரை

எமது நிலயம் முப்பதாம் அன்பு மலரைப் பேரின்பக்கடவுள் மலரடியில் வைத்து வணங்குகிறோம். இப் பாடல்கள், ஆழ்ந்த சுயானுபூதியால் அடிகள் நிஷ்டையிலிருந்து அருளியவையாகும். இவை பெரும்பாலும் பதினோராண்டுகளுக்கு முன்பு அடிகள் திருவண்ணமலை விருபாட்சி குகையில் தவம்புரிந்தபோது பாடப்பெற்றவையாகும். இப்பாடல்களை உருக்கமாகப் பாடும் அன்பருக்குச் சித்தசுத்தியும், சிவானந்தமும், ஆன்மவெற்றியும், அருளறிவும் எய்துவது உறுதி.

இந்த அரிய பேரின்பப்பாடலைத் தம் அருமைத் திருமகன் திருவளர். சாத்தப்பன் புதுமைநன்னாளில் வெளியிட்டுதவிய அன்பர் **காரைக்குடி திரு. சா. அழகப்ப செட்டியார்** அவர்களுக்கு எமது நன்றியாகுக! இந்த அன்பர் பொதுநலப் பணிகளில் ஆர்வம் மிக்கவர்; தமிழ் வளர்ச்சியில் காதல்கொண்ட உண்மைத் தமிழர்.

இத்தகைய அரிய அன்பர் உதவியாலும், சிவபெருமான் அருட்டுணையாலும் நாங்கள் கொண்டுள்ள தமிழ் விரதம் இனிது நிறைவேறுக அடிகளின் பாமலர்களை இந்த ஆண்டு வெளியிட்டு முடிக்க முனைந்துள்ளோம். திருவருள் தோன்றாத்துணை நின்று எளியேமை முன் நடத்துக.

விக்கிரம௵
வைகாசிமீ ௧௩௳ }

அன்பு நிலயத்தார்.

பேரின்பம்

க. பரமாத்மா

ஆதிபர மாத்மனே, அகிலாண்ட நாதனே,
அகநா டகத் தரசனே,
அனந்தகுண னேகுண தீதனே, அமலனே,
அருவ னேஅரு ளுருவனே,
சாதிமத வாதங்கள் சாராத சாக்ஷியே,
சதாமோன சஹஜ நிலையே,
சாந்தசம ரஸசுத்த சன்மார்க்க தீபமே,
தத்வமஸி யென்று மேலோர்
போதித்த மந்திரப் பொருளே, உயிர்க்கினிய
புகலே, புவிக்குள் வளரும்,
பூதபௌ திகமான பேதங்க டந்தசிற்
போத மேசிவ போகமே,
ஜோதிபர மானந்த வெள்ளமே, உள்ளமே,
உள்ளத்தி லுண்மை யுணர்வே,
துரியபரி பூரண சுதந்தர நிரந்தர
சுயம்சச்சி தானந் தமே!

உ. நீயே எல்லாம்

நீயே எனக்கன்னை, நீயே யெனக்கப்பன்,
நீயே யெனக்குச் சுற்றம்,
நீயே யெனக்குலகு, நீயே யெனக்குறவு,
நீயே யெனக் கிகபரம் !
நீயே யெனக்குநிதி, நீயே யெனக்குமதி,
நீயே யெனக்குக் கதியே !
நீயே யெனக்குகுரு, நீயே யெனக்குமொழி,
நீயே யெனக்கு வழியே !
நீயே யெனக்குணர்வு, நீயே யெனக்குயர்வு,
நீயே யெனக் கனுபவம்,
நீயே யெனக்கருமை, நீயே யெனக்கபயம்,
நீயே யெனக் கிறைவனே !
ஆயிரங் கதிர்வீ சருட்பெருஞ் சோதியே,
ஆன்ம நிறைவே ஆதியே !
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே !

௯. அன்புமதம்

அன்பே யுனக்குவமை, அன்பே யுனக்குருவம்,
அன்பே யுனக்கா லயம்.
அன்பே யுனக்குமலர், அன்பே நிவேத்தியமும்,
அன்புவழி பாடு னக்கே.
அன்பே யுனக்காகும் ஆசார நியமமுள்
ளன்பே யெனக் கறநெறி.
அன்பே யெனக்குமதம், அன்பே யெனக்குசுகம்,
அன்பே யெனக்கு முத்தி.
அன்பே யெனக்குடலம், அன்பே யெனக்குயிருன்
அன்பே யெனக் குலகெலாம்.
அன்பே யெனக்குவரம், அன்பே யருந்தவமுன்
அன்பே யனந்த பதவி.
அன்பழகு பொங்கிநிறை, யன்பலை புரண்டோடும்
அன்புமய மான பொருளே!
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே!

௪. எப்போதும்

எப்போது முன்பூஜை, யெப்போது முன்னெண்ணம்,
எப்போது முன்ற னுறவே!
எப்போது முன்சக்தி யெப்போது முன்முக்தி,
எப்போதும் உன் சித்தியே!
எப்போது முன்சுத்த மெப்போது முன்ஸத்ய
மெப்போது முன் ஸமரஸம்,
எப்போது முன்யோக மெப்போது முன்போக
மெப்போது முன் ருகமே!
எப்போது முன்சச்சி தானந்த மயமாகி
யென்றென்று முன்ற னுடனே,
ஏகாந்த நித்திய சுகாதீத நிஷ்டைபெறும்
இன்பப் பசிக் கமுதமே!
அப்பனே யுனையன்றி யெனையாவ ரறிகுவர்,
அனந்த ஞானப் புனிதனே!
அருள்பெருத மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே!

௫. உன்னால் நான்

உண்ணுவது முன்னால், உயிர்ப்பதுவு முன்னால்,
உணர்வதுவு முன்றனாலே.
ஊருவது முன்னால், உரைப்பதுவு முன்னால்,
உவப்பதுவு முன்றனாலே.
எண்ணுவது முன்னால், இயங்குவது முன்னால்
இருப்பதுவு முன்றனாலே.
ஏதேது செய்திடினு மெல்லாமு னிச்சையே
எல்லாமுன் ஆராதனை.
கண்ணிலா ருங்காண்பர், கண்டவர்கள் வாயிலர்,
கருத்திறந் தோர்க ளுணருங்
காட்சியே, யனுபவச் சாட்சியே, யெங்கணுங்
கரைகடந் தொளிர் மாட்சியே!
அண்மைக்கும் அண்மையே, அப்பாற்கும் அப்பால்
அதற்கு மப்பா லிலங்கி,
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே!

சா. நீயே புகல்

பொற்பதத் துணையலாற் புகலிலேன் புகலிலேன்,
பொய்யுலகை நம்ப மாட்டேன்.
பொன்னையான் வேண்டிலேன்; பொருளையான் [வேண்டிலேன்,
பூவையர் பிணிச் சுகத்தைச்
சொற்பனத் தேனும்யான் வேண்டிலேன் வேண்டிலேன்,
சொகுசுநடை யுடை வேண்டிலேன்.
சோதித் தெனைக்கோடி சூழ்ச்சியாற் காணுவாய்
சோதியே யெங்கு நிறைவே!
இப்போ திருப்பதுவும், இனியான் இருப்பதுமுன்,
இன்பத் திருப்ப தல்லால்,
ஏழையேன் எங்கிலும் இருப்பொன்று மில்லேன்,
விருப்பொன்று மெதிலு மில்லேன்.
அற்பவுல கத்தினை மதித்திலேன் ஐயனே
யாவுநீ யென மதித்தேன்,
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே!

எ. உன்னடிப் பித்தன்

எத்திசையும் உன்னன் றிருக்கவில்லை யோ? சற்றும்
என்மிசையும் அஃதில் லையோ?
எல்லாமுன் இச்சையின் படியே யியங்கியிங்
கிவ்வுலகு சுழல விலையோ?
முத்துமுத் தாய்த்திகழு முத்தமிழ் மாலையை
முதிர்ந்தவுள் ளன்பர் சூட்டி,
முத்துநகை யோடுனது முத்தியமு துண்டென்று
மோனத் திருக்க விலையோ?
பத்தன்யான் இரவுபகல் பாடியா டிக்கூவி
பல்பல தவம் பயின்றே,
பார்த்துள மடங்கியுன் பரிவலாற் கதியிலேன்,
பரிகாரம் வேறொன் றிலேன்.
அத்தனே, யுன்னடிப் பித்தாகி நம்பினேன்
அனைத்துமுன் சித்த மென்றே.
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே!

[எ]

அ. ஆறுதல்

தாயாகிலும் வறுமை சாற்றியிலை யென்னுவாள்,
சகோதரர் துணை மறுப்பார்.
தந்தையுங் கடுகடுத் திடுவனுன் றயவிலே
தட்டுமுட் டுகளும் உண்டோ ?
நோயுற்றெ னுடலம் நுடங்கிமெலி வெய்தினும்,
நூறுகூற் றெதிர் வருகினும்,
நோவைப் பொறுத்துனது திருவடியில் நோற்றலே,
நோய்தெறு மருந்தா யினேன்.
தாயேயெ னப்பனே தயவுசெய் யுன்மனந்
தான்வெல்க வென்ப தல்லால்,
தனியனேன் யானெனு மகந்தைகொண் டென்றுந்
தனித்தவழி சென்ற துண்டோ ?
ஆயாம லோயாம லடியனேன் அலறினேன்,
ஆறுத லளித் தருளுவாய் !
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே !

௬. எம்மொழியில்

எம்மொழியி லெவ்வகையர், எம்முறை வழுத்திடினும்
எல்லா முவக்கு மிறையே!
இன்பத் தமிழ்மலரோ டெக்காலு முன்னையே
யிடையறா தோது கின்றேன்.
உன்மொழியும் என்மொழியும் வேறுபட் டுள்ளவோ?
உள்ளதொரு மொழி யல்லவோ?
ஓங்கார வுட்பொருட் குயிரே யகாரமே,
யுலகெலா நிலவு மொன்றே,
சன்மயத் தீபமே, சின்மயக் கதிர்பரவு
சாட்சியே சக்தி விரிவே,
தாராத லத்திலெத் தகையர்திரு வுள்ளமுந்
தானென விளங்கு நிறைவே!
அன்னையப் பாவுனக் காவியுட லன்றே
யடைக்கலம் வைத்து கந்தேன்.
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே!

கo. நீயே கதி

கர்ச்சித் தெழுந்துவிழு திரைகளுக் காதியாங்
கடலலாற் கதியு முண்டோ?
கரைபுரண் டோடுமிக் காளுற்றி னுக்கருட்
கடலலா லமைதி யுண்டோ?
தர்க்கித் தெழுந்ததான் றனெனு மொழிக்குலந்
தன்னறிவி லேற் றணியுமோ?
சகத்தினை யலைக்குஞ் சழக்குஞ் சமர்களும்
சாந்த மல்லாற் றீருமோ?
துக்கசுக தொந்தமற முக்குண வகந்தை
துளிர்க்குமன மாயை தோன்றச்
சுத்தசிவ ஜோதிவளர் துரியஸம நிலையே,
சுதந்தரப் பதவி யென்பார்.
அக்கதிக் காளாகி யானுமிங் குய்வனோ?
ஆண்டா யுனக் கடிமை யான்.
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே!

கக. ஞான மூர்த்தி

ஆசையெனு மதயானை தனையடக் கிடவெனக்
கங்குரம் போன்ற ஞான
வமைதியை யளித்தனை, அகந்தையிருள் மாற்றினை,
ஆகாவுன் அன்பென் சொல்வேன்!
வேசைவிழி போலவலை வீசுமா மாயமன
வெறியாட்டும் வீண் மினுக்கும்,
வேடங்கொள் சூழ்ச்சிகளும் வெட்டவெளி யாக
[வொரு
விடுதலைக் கனலீந்தனை.
தேசைச் சிதைக்கின்ற பாசக் குழிக்குள்யான்
சிக்காது பாது காத்தாய்.
சிறுவயதி லேயெனைத் திடமாக வுன்வழி
திருப்பித் திருத்தி வந்தாய்.
ஆசானு மன்னையுமெ னப்பனு மருந்துணையு
மானவிஞ் ஞான மூர்த்தி!
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே!
அறிவான பர தெய்வமே!

கஉ. சகச நிலை

மறைகளோ பலபல, மதங்களோ பலபல
வகைவகை முரண்கள் பலவாம்.
மனிதமதி யாலே வகுப்புண்ட விதிகள்பல,
வாத பேதங்கள் பலவாம்.
குறைமல்கு கோடிநூற் சுமைகொண்டு பரசுகக்
குன்றின்மிசை யேற வசமோ?
கோதற்ற வாதற்ற குறியற்ற தூயநெறி
குணமூன்று மற்ற நிலையே!
நிறைவான வானந்த நிஷ்கள நிராமய
நிரந்தர சுதந்த ரத்தில்,
நின்னோடு நீயான ப்ரம்மநிர் வாணமே
நிசசகச நிலை யெனக்கே;
அறமகெதன் றிறமகெதன் வரமகெதன் முத்திவீ
டகெதன்றி யெகெதும் வேண்டேன்.
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே!
அறிவான பர தெய்வமே!

கரு. வேற்றுமைகள்

எத்தனை மதங்களு ளெத்தனை வகுப்புகளு
ளெத்தனைப் பிரிவினைகள் !
எத்தனை முடைகளிங் கெத்தனைத் தடைகளிங்
கெத்தனை மண்டை யுடைகள் !
எத்தனைக் கொள்கைக ளெத்தனைக் கோலங்க
ளெத்தனை மதப் பித்தர்கள் !
எத்தனை முக்குண விகாரங்கள் ! அத்தனையும்
எண்ணவோ ரெண்ணு முண்டோ ?
இத்தனையு மல்லா திருந்தபடி யென்றுநா
னிருக்கவொ ரிருக்கை தந்தாய்.
இவ்வின்ப நிலையிலே யென்றென்று நிற்பதே
ஏகாந்த சுக மெனக்கே.
அத்தனே யதுவலா லடைவதற் கெதுவுமிலை.
ஆராய்ந்த வுண்மை யிதுவே.
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே,
அறிவான பர தெய்வமே !

கச. குருவே

குருவே, யெனைக்கொண்டு கோதறுத் தாண்டசற்
குணமே, குணங்க டந்தோர்
கூடிடுஞ் சமரஸ சிவானந்த முத்திவளர்
குன்றமே, யென்று முள்ள
பொருளே, பொருண்மேவு போதமே யப்பெரும்
போதங் கடந்த விரிவே,
பொங்கிப் பொலிந்துநிறை மங்கலக் காட்சியே,
புகலரிய சகஜ நிலையின்
உருவே யுணர்வாகு முறவே, யுளங்கா ணு
மொளியே பரந்த வெளியே,
உண்மைநீ, புண்மைநீ, யெனையாண்ட பகவனே
யுலகாளு மருளா ளனே,
அருவே, அருட்பெருஞ் சோதியே, ஆதியோ
டந்தமுமி லாத பொருளே,
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே,
அறிவான பர தெய்வமே!

கரு. தானே தனக்கினிது

தாரா தலத்தினிற் சாற்றுமொழி யாவிலுந்
தமிழினிது தமிழினிது காண் !
தாராள வாஞ்சையுள தமர்சுற்ற முறவினுந்
தாயுறவு மிகவினிது காண் !
பாரா தி தனிலுள்ள கண்டங்க ளிற்புனித
பாரதகண் டம்பெரிது காண் !
பண்புற முயல்வினைகள் பலவினுந் தனைவென்ற
பரமதவ மினிதினிது காண் !
சீராதி பெருமைக ளியாவினுஞ் சீரியது
சித்தவை ராக்கியங் காண் !
தேடரிய சித்திகளி லோங்கியது, தேட்டற்ற
சிவதுரிய சகஜநிலை காண் !
யாரா ரெனக்கினிது செய்திடினு மாராயின்
யானே யெனக்கினிது காண் !
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
அறிவான பர தெய்வமே !

௧௯. மனவுறவு

இன்னிய துணைவனுனை யல்லாமல் இவ்வுலகில்
எங்குமில்லை, எவரு மில்லை,
ஈசவுன் முன்னிலையி லைந்தவித் தென்னையினி
ஏகாந்த மாக்கி விட்டேன்...
தன்னிக ரிலாத்தடங் கருணையே உன்பதந்
தஞ்சம் புகுந் தொழிந்தேன்
சதானந்த யோகந் தழைத்திடற் காகிய
தனிப்பெரிய மௌன வுறவே !
கன்மங்கள் யாவையுங் கதிர்கண்ட பனியெனக்
காய்ந்திடுந் தவ நெருப்பே,
கட்டவிழ்த் தென்மனக் கவலையினை முற்றுங்
களைந்தசுடர் ஞான வாளே !
அன்னிய மெனுதசக சானந்த மருளுவாய் ;
அன்புநீ யாத ரவுநீ ;
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
அறிவான பர தெய்வமே !

கஎ. ஐக்கியம்

நீவேறு நான்வே றெனப்பல நினைக்கின்ற
நிம்மதி யடைவ தில்லை ;
நின்னின்று மச்சமொ டகன்றுதனி நிற்கின்றே
நீர்பெருகி யுருகி யழிவேன்.

தாய்வேறு சேய்வே றெனப்பிரித் தெண்ணிடுந்
தாயன்பு சேய்க் குதவுமோ ?
சாதிமத வாதச் சழக்கினால் வேற்றுமைச்
சந்தையாம் உலக மந்தோ !

பாய்திரையு மாழியு மிரண்டென மருண்டமதி
பதியன் பியல் பறியுமோ ?
பரிதியும் விழியும் பகுத்ததொரு பார்வையோ,
பச்சையில் லாம விலையோ ?

ஆய்ந்தவரி னனுபவ மனைத்தினிலு மொன்றாகும்
* " அதுநீ " யிதற் கையமோ ?
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே,
அறிவான பர தெய்வமே !

---

* தத்வமஸி

கரு. சுகாதீதமே

காமிய வழுக்கின்றி யுன்கருவி யாயெனைக்
கைம்மலரி லர்ப்ப ணித்தேன்
காணவுட லுயிர்பொருள் கருத்தன் பனைத்தையுமுன்
காலடியில் அர்ச்சித் தனன்.
சேமமுற வெனையாண்டு கொள்ளுவாய், சாந்தச்
சிதானந்த சிற்காந்தமே !
சிறியனேன் பிழைகளைச் சிட்சித் திரட்சித்துச்
சிந்தைவைத் தாளாக்கு வாய் !
நீமனது கொண்டபடி நிறைவேற்று வாயுனது
நிறைவினை நிறைத்தெ னுள்ளே
நீயலாற் பிறிதொரு நினைப்பிலேன், செயலிலேன்,
நித்திய சுகாதீ தமே !
ஆமென்று மன்றென்று மொன்றென்றும் பலவென்றும்
அகிலங்கள் போற்ற நின்றாய்,
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே,
அறிவான பர தெய்வமே !

௧௧. வேண்டாமை

வேறென்ன நெஞ்சே விரும்பிய விருப்புகள்
விரும்புவா றீந்து விட்டேன்.
வேண்டினேன் உன்னையொரு மேலான நன்றியினை
வேண்டாமை வேண்டி யருளாய் !
சோறென்ன பணமென்ன சொகுசென்ன சோம்பலாஞ்
சுகமெலாங் கண்ட லுத்தாய் !
தொல்லுலகி னல்லலைத் துகளற வறிந்துளஞ்
சோதித் தியல்பு கண்டாய் !
மாறிமாறித் தேயு மாயா விகாரத்தில்
மாறுபட் டலையே லெனாய்.
மறுவற்ற தூயநெறி மாசற் றுணர்த்திய
மஹாயோகி தனைவாழ்த் துவாய்.
" ஆறாத லெனக்குன்ற னருளமுத வெள்ளமே,
அகமக மெனுங் கூத்தனே,
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
அறிவான பர தெய்வமே !"

௨௦. வேண்டுவன

பெற்றாலு னமரநிலை பெறவேண்டு மில்லையேற்
பிறவிதனை மாய்க்க வேண்டும்.
பேசினால் உன்மகிமை பேசவேண் டும்,அலாற்
பேசாத தனிமை வேண்டும்.
உற்றா லருட்பணிக் குறவேண்டு மில்லையேல்
ஒடுங்கியுள் ளடங்க வேண்டும்.
உன்னினா லுன்பெருமை யுன்னவேண் டும் ;அலால்
உன்னலறு மமைதி வேண்டும்.
பற்றினா லுன்பதம் பற்றவேண் டும் ;அலாற்
பற்றற் றிருக்க வேண்டும்.
பார்த்தாற் சுயஞ்சோதி பார்க்கவேண் டும் ;அலாற்
பார்வையுள் ளாக்க வேண்டும்.
அற்றாலென் பந்தவினை யறவேண்டு மின்றேலுன்
அருளாடல் புரிய வேண்டும்...
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
அறிவான பர தெய்வமே!

உக. தவ நிலையம்

மலையுண்டு மாதவத் திற்கரிய குகையுண்டு,
மனமொன்றி நின்று விடிடேனே,
மகிழ்வுண்டு, தனிடமுண்டு, மறலிபா சமுமஞ்சு
மௌனசிவ மந்த்ர முண்டு.
கலையுண்டு, நிலவுண்டு, கவியுண்டு, செவியுண்டு,
கண்ணுண்டு காட்சி யுண்டாம்.
காட்டிடக் குருவுண்டு, கதியுண் டியோகவெங்
கனலுண்டு வினையுண் டிட;
நிலையுண்டு சிற்சக்தி நிதியுண்டு பதியுண்டு
நிறைவுண்டு குறைவுண் டிடோம்;
நீக்கமற நீடுநல் லமுதுண் டிருக்கலாம்
நீவருதி யென வழைத்தாய்,
தொலையுண்டெ னருகிலே தோன்றி மனையேகிடத்
துணைவருந் தூய வுறவே,
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதி மலையே!

௨௨. உலகியல்பு

இன்றுநே சித்தவர்க ணாளையே வெருகுபோல்
இகல்வேட்டை யாடு முலகம்,
எமன்வரினு மிணையரோமென்றென்று மன்புளோம்
என்றுருகு காத லாளர்
சென்றுண் டுறங்கிமன மொன்றென்று கொஞ்சியென்
செல்வச் சிறப்பின் வளமே,
தேனினும் பாகினுந் தித்திக்கு மின்பமே,
திருவே யெனக் கலந்து,
நின்றவர்க ளொருபிணக் கொருநொடியி னேரவே,
நேர்பகைவ ராய்ப் பொருதுவார்,
நிறைகெட்டு, மதிகெட்டு, நெறிகெட் டலைவரிது
நீசவுல கத்தி னியல்பே
தோன்றுதொட் டிவ்வியலை நன்றுதேர்ந் துனையலாற்
றுணைவேறு நினைவி லறியேன்.
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே,
சுடர்பரவு சோதி மலையே!

உரு. வஞ்சர்நடை

காலில்வீழ்ந்து, கைகட்டி, வாய்பொத்தி, முகமனுற்
காரிய முடித் தேகுவார்.
கைதந்த நன்றியைக் காலினால் எத்துவார்
கடன்வாங்கி யில்லை யென்பார்.
வால்கெட்ட நரிபோலக் கால்கெட்ட புலிபோல
வஞ்சக மதம் பேசுவார்.
வாக்கினை மறுப்பர், பிறர் வாழ்வைக் கெடுத்திட
வழக்கிற் கிழுத்த டிப்பார்.
சேல்விழியர் மோகவலை சிக்கிச் சிறுத்திடுவர்.
தீமையினை நன்மை யென்பார்.
சீடர்போன் ருஷாட பூதிவே லைசெய்வர்,
தெய்வத்தை யுந்தூ ற்று வார்.
தோல்வருண பேதங்க ளாயிரஞ் சொல்லுவார்
தூயநடை காண மாட்டார்
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதி மலையே !

௨௪. சுயநலக் கும்பல்

எழுதின்னு மெழுதின்னு மென்றெழுதி வாங்குவார்
எழுதுமைக் காசு மீயார்.
எழுதிக் கொடுத்ததைப் பணமாக்கி யெண்ணுவார்;
எமதுரிமை நூலென்னு வார்.
உழையின்னு மெனவேலை வாங்குவார் பணமெனில்
ஊமையுஞ் செவிடு மாவார்.
ஊருக் குழைப்பதாய்ப் பேர்பண்ணி வந்ததை
யொளித்தொளித் துண்டு வருவார்.
உழுதிடும் விவசாயி ஒருவேளை யுண்ணவும்
உண்டெனத் தந்துதவி டார்.
ஓயாது பொதுவுடைமை பேசுவார்; ஏழையெனில்
ஒருபருக் கையு முதறிடார்.
தொழுவார்கள்; பிறர்கெடக் கடவுள் துணை வேண்டுவார்
துட்ட டிக்கப் புகழுவார்.
சுயநலக் கும்பலின் சூதுவா தென்சொல்வேன்
சுத்தநிலை யோங்கு சுடரே!

௨௫. உலகமாயம்

செவ்வழியி லேசென்றிச் சென்மமீ டேறயான்
செய்த வத்தைக் கெடுக்கும்
சிந்தை கலங்கச் சிரித்துவிளை யாடிடுஞ்
செகசால விழிகாட் டிடும்.
வெவ்விய பசிக்குணவு தேடிவரு வேங்கைபோல்
விழைகொண்டு மேற் பாய்ந்திடும்,
வெம்முதலை போலப் பிடித்ததை விடாதுடன்
விழுங்கி யேப்பம் விட்டிடும்.
ஒவ்விய சுகானந்த நிட்டைக்கோ ரிடர்கட்டை
ஒய்யார மாய்ப் போட்டிடும்.
ஓட்டவோட்டச் சென்று வந்தின்னு மொட்டிடும்
ஓராயி ரஞ்சூழ்ச்சி யால்.
இவ்வுலக மாயத்தின் ஏமாற்று வித்தைகளை
என்னா லியம்ப வசமோ?
ஏகாந்த மௌனத்தி லென்னைவைத்த கடவுளே,
இன்பமே அன்பு மயமே!

உ௬. வம்பு

ஊரென்ன ? பேரென்ன ? உறவென்ன ? மதமென்ன ?
உள்ளசெல் வங்க ளென்ன ?
ஓதிய வகுப்பென்ன ? உத்தியோ கம்மென்ன ?
ஊதியம் மாத மென்ன ?
சீரென்ன ? வீட்டின் சிறப்பென்ன ? செய்யென்ன ?
செய்தந்த விளை வென்னவோ ?
சீதனங் கொண்டுவரு மனைவியின் சிறப்பென்ன ?
செல்வரின் செவ்வி யென்ன ?
பாரென் புகழ்விரிவை ! நீ பெற்ற புகழென்ன ?
பவுஷென்ன சொகுசென் னவோ ?
பகரெனப் படபடப் புடன்வினவி வம்பினிற்
பகலிரவு போவ தறியார்...
யாரென்ன வினவினான் அதுவென் றறிந்திடார்
யாதோ புகன்று திரிவார்.
யாதிலுந் தாக்கின்றி யாங்கணுந் தானா
யமர்ந்த பரமா னந்தமே !

உஎ. வினாக்கள்

யாரிறைவ னெங்குளான் ? எங்குமுள தெங்ஙனே ?
யாதுருவ னவ னருவனோ ?
யாவண்ணன் ? யாவினையன் ? யாமொழியன் ?
[யாதினால்
யாதுமவ னாகி நிற்பான் ?
பாரிலவன் செய்யும்வினை யாடலின் பரிசென்ன ?
பார்ப்ப தவனை யாங்ஙனம் ?
பல்லுயிர்கள் ஆண்பெண் படைப்பா யிருக்கையிற்
பரமன் படைத்த வகையென் ?
வேரினி லெழுந்தமர மோவிதைய தோமுதல் ?
வினையின்வினை வுண்மை யன்றோ ?
வேதாந்தம் அஹம்ப்ரம்ம மென்கையி லெனக்குமேல்
வேறான கடவு ளுண்டோ ?
போரிடும் புலவரிக் கேள்விக ளடுக்குவார்
புந்தினிலை நின்று பாரார்.
புன்னகை புரிந்திதய மன்றிற் பொலிந்திடும்
பொருளே, விளங்கு மருளே !

உஅ. நிலையாமை

ஊருண்டு, நிலமுண்டு, பணமுண்டு, வளமிக்க
வுரமுண்டு செயலுண்டு மேல்,
உறவுண்டு, திருமிக்க மனைமக்க ளுண்டெங்கும்
உலவிடச் சிவிகை யுண்டு.
பேருண்டு, புகழுண்டு, பேரிடத தன்புண்டு,
பேசிட மதிப்பு முண்டு.
பின்னொருவர் என்னிகர்வ ரில்லையிப் பெற்றியாம்
பெரியம்யாம் என்ற பேரில்,
யாருண்டு நிலையா யகந்தையினி லுண்டுண்
டுருண்டவர்க களவுண் டுகொல்?
அலைபோ லெழுந்துவிழு மாசாங்க வாழ்க்கையினை
யாவரே யுலகி லறியார்?
தாருண்ட நீரெனச் சுகமுண்டு நின்னருள்
சுவைத்தென்னை யண்டு விடுக!
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதி மலையே!

உக. சுமையொழித்தல்

கண்ணார நான்செய்த கர்மங்களை யெண்ணிக்
கண்ணீர் விடுத்து னடியிற்
கதறுகின் றேன்பாவி, யுன்கருணை யென்முகங்
காணுமோ? நாணு மோதான்?
வண்ணான் சுமைக்குமொரு கழுதைவா கனமுண்டென்
வன்சுமையை யார் சுமப்பார்?
வாயைத் திறந்துனை வழுத்தவும் வகையில்லை;
வஞ்சனேன் வினை யப்படி!
அண்ணா திருக்கர மளித்தென்னை மேலேற்றி
ஆகாத வினை மூட்டையை
அடியிலே தள்ளியுன் அருண்மலையின் முடியிலே
ஆனந்த நிலயத் திலே,
புண்ணாறி யான்மாறி யுன்போத மாகவளர்
புண்ணிய மெனக் கருள்வையோ?
புகலே, யெனக்கொர்மொழி புகலே யருட்பகலே
பூரணா னந்த வாழ்வே!

௩௦. இன்னும்

இன்னுமொரு வழிகாண வியலாம லலைகிறேன்
இந்த்ரஜா லக்கன விலே.
ஏமாற்று மாயா விகாரங்க ளின்பமென்
றிகல்செயுங் கொடுமை தாங்கேன்!
பொன்விலங் கும்விலங் கேயல்லவோ? மணிப்
பூட்டுமோர் பூட்டல் லவோ?
போகமென வருகின்ற மோகாந்த காரமெனைப்
புதைகுழியி லேதள் ளுதே;
கன்மபந் தங்கள் கழன்றுவிடு தலைபெற்றுன்
காட்சியனு பவமெய் துமோ?
கண்கட்டி விளையாடிக் காட்டிலே கைவிடுங்
காமக்கு ரோதா திகள்
என்னைநய வஞ்சமாய்ப் பற்றியிடர் செய்யாம
லென்னுள் விழித்தி ருப்பாய்!
இவ்வுலகில் வேறுகதி இல்லேன் அறுதிநான்
ஈசநின் கழல்பற் றினேன்!

௩௧. மனப்பிழை

தெரிந்தியான் செய்தபிழை பலகோடி, பலகோடி,
தெரியாத தெண்ண வசமோ?
சிந்தையி லகந்தைவெஞ் சிறுபேய் புகுந்தெனைச்
சீரழித் ததுகொஞ் சமோ?
காந்தியான் செய்தவினை கைமேற் பலித்திடக்
கர்மங்க ளக்கரைத் தாய்
கண்பார்த்து நீயெனைக் கைதூக்கி விட்டாயுன்
கருணையால் ஆளாயி னேன்.
மாந்தலைச் சிதல்போலென் மனதைத் துளைத்திடு
மயக்கங்க ளக்க ளைந்தாய்,
மறலிவாய் வீழ்ந்தவனை மகனென்று மீட்டமர
வாழ்வின்ப மீந்து காத்தாய்,
சுரந்தமு திடைவிடா தூட்டியிச் சேயினைத்
துரியமாந் தொட்டி விட்டாய்,
சுத்தபரி பூரண சுகானந்த வாரிபே
சுடர்பரஞ் சோதி மலையே!

௩௨. புல்லியல்

நாயேன், நவின்றிடவு நாலுபேர் சீயென்னு
நச்சுவினை கொச்சைப் பயல்,
நலந்தீ தறிந்திடா நரகவாழ் வைப்பற்றி
நாறிக் கிடந்த புலையன்.
தீயேன் பகற்றிருடன், சிற்றினச் சேர்க்கையே
செய்திடுங் கைதவ சடன்.
திட்டும் பொறாமையம், வஞ்சமும், கோளுந்
திருட்டும் உருட்டி வார்த்த
பேயே னெனக்குமொரு பேரன்பு பாலித்த
பெருமைபெறு பெரிய பொருளே...
பிள்ளையென் றெத்தனை பொறுத்தனை பெரும்பிழை
பேசரிய கருணை வள்ளால்!
தூயமதி தந்தே தடுத்தாண்ட துங்கமே,
துறைசேர்தக வருள் வங்கமே,
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதி மலையே!

௩௩. சித்தசலனம்

அரைநொடி யிதற்கிட மளித்திடிற் போச்சுதென்
ஆவியை யலைக்குதந்தோ ?
ஆகாத பேயலைகள் ஆயிர மெழுப்பியுள்
அமைதியிற் புயல் வீசுதே.
உரிமையினை யுரிமைகொண் டெனைவாட்டி யுலகெலாம்
ஓட்டிக் குதிக்குதையே
உணவினிலுங் கனவினிலும், ஊர்வம்பு தன்னிலும்
உலகா யதச்சேற் றிலும்,
கரையற்ற கருமபந் தங்களிலு மாசையாங்
கானல்வெஞ் சுரம தனிலும்,
காமாந்த காரமாங் காட்டினிலு மென்றனைக்
கண்கட்டி விளையாட் டுதே.
துருதுருக் குந்துட்ட மனதினை யடக்கவொரு
சூட்சுமஞ் சொல்லை யனே !
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதி மலையே !

௩௪. மனக்குரங்கு

உறங்கிடினு மென்னுளிவ் வோயாத மர்க்கடம்
ஓடியா டித்திரி குதே
ஓகோ விதன்கூத்தை யோதவும் ஒல்லுமோ?
உரைநிறை யதற்கு முண்டோ?
திறங்கெடுத் தென்னைத் திடீர்பகீ ரென்னத்
திடுக்கிடுங் காட்சிக ளுடன்,
செகமெலாஞ் சலனத் திரைப்படல மாக்கியிச்
சிந்தனை நடம் புரிகுதே!
இறந்தகா லத்தினி லியற்றிய வினைகளை
யெதிர்கொண்டு விளையாட் டுதே!
இங்கங்கு மெங்குமொரு கங்குகரை காணுமல்
இருவிகற் பத்தி லுழலும்,
சுறட்டனை யுனக்கொரு குறட்டெனப் பூட்டுவாய்
துரையே யனந்த நிறைவே,
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதி மலையே!

[௩௪]

௪௫. மௌனப் பூட்டு

இனிமேல் விதற்கிட மொருக்காலு மீந்திடேன்
இஃதுறுதி யுறுதி சொன்னேன்.
எத்தனை முறைச்சபத மிட்டுரைத் தேன்! முடிவில்
இமையாது பார்த்து நின்றேன்.
தனிமையிற் கட்டிச் சதாமோன மென்னுந்
தடித்தவாய்ப் பூட்டு மிட்டேன்
தானறு சமாதியிற் சகமற்று நிற்கவொரு
சகசபீ டமுமமைத் தேன்,
கனவுவளர் முன்னிலை சுட்டறக் காண்பதே
கவலையறு காட்சி யென்றேன்.
கலங்காம லினியிது கதிக்கான முத்திபெறக்
காப்புநீ கருணை வள்ளால்!
துனிவற்ற கடலுநீ, கலமுநீ, கரையுநீ
துணைவநீ, துரிய குருவே!
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதி மலையே!

௩௯. வைராக்கியம்

எத்தனை யிடர்வரினு மெக்கொடிய நோய் வரினு
மென்னென்ன வின்னல் வரினும்,
ஏழ்மை வரினும்பிறர் இகழ்ச்சி வரினும், உடல்
இளைத்தென்பு முருகி விடினும்,
சித்தி வரினும் எனைச் செகமெலாம் பித்தனெனச்
சீறிச் சிரிக்க வரினும்,
தெளிந்துட் கலந்தமெய்ச் சிவகாம மதனிலே
சிறுமையொன் றுண்டா குமோ?
எத்திசையு மெக்கணமு மெவ்விடமு மென்னுள்
இரண்டறக் கூடி நின்றாய்,
இன்பனே நண்பனே, இறைவனே பரமனே,
எல்லா முனக்கா குக!
தொத்துறு துயர்க்குலத் தூசியெனை யணுகுமோ?
பரிதியைச் சூறை தொடுமோ?
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதி மலையே!

௬௭. அமைதிநிலை

சங்கையறு சாத்திரச் சக்கைசுக மீயமோ ?
சடவாழ்வி லின்ப முறுமோ ?
சடசடெனச் சபைபேச்சச் சந்தம் பொழிந்துஞ்
சமாதான மாகி விடுமோ ?

அங்கண்மா வுலகைத் திருத்துவோம் யாமெனும்
அரும்பணியும் அமைதி தருமோ ?
அருநிதிக ளெல்லா மமைந்தோங்கி னும்மன
மடங்கிட வுபாய மாமோ ?

கங்கையுந் தானமுங் கருமமுங் காவியுங்
கவலையை யொழிந்து விடுமோ ?
காயக்கி லேசமுங் கற்பமும் *மூச்சங்
கடைத்தேற வழியு மாமோ ?

தங்குதடை யில்லாச் சதானந்த மோனந்
தனக்கிணை சகத்தி லுண்டோ ?
சர்வசம ரஸசுத்த சாந்தநிலை யொளிவளரு
சச்சிதா னந்த மயமே !

* பிராணசாரணை.

பேரின்பம்

௩௮. சிற்சுகம்

தானாக நின்றெலாச் சகமாகி யுகமாய்ச்
சலிக்கின்ற கால மாகித்
தன்னுளே யாவுமாய் யாவிலுந் தானாய்த்
தனித்தொன் றனந்த மாகி,
வானாகி, வளியாகி, யனலாகி, நீராகி,
மண்ணாகி, மண்ணுல கிலே,
மாயையாய், மாயியாய், மட்டுக் கடங்காச
மன்னுயிர்க் குயிரா டலாய்,
நானாகி நீயாகி, அவனாகி, யவளாகி
நானாவிதப் பொருள்க ளாய்
நலியும்வினை யுடலிலே நலியாத ஒன்றாக
நடுநின்ற சாட்சி யாகித்
தேனாகிப் பாலாய்த் தெவிட்டாத கனியாய்த்
தியானத் திலே யினிக்கும்
திவ்யகுண மேருவே தீபமே, போதமே,
சிற்சுகா னந்த சிவமே!

௩௬. உத்தம ரகசியம்

சத்தாகிச் சித்தாய்ச் சதானந்த மாகியே,
தானே தனக் குவமையாய்ச்
சத்திமழை பொழிகின்ற சண்டமா ருதமே,
தழைத்தோங்கு மருள் வெள்ளமே!
உத்திமன மெட்டரிய வுத்தம ரஹஸ்யமே,
உள்ளன்பி னுக்க முதமே!
உரையாத மந்திரமு ரைத்தனைய தன்பெருமை,
உரையா லுரைக்க வசமோ?
தித்திக்கு மின்பரஸ மெல்லாந் திரண்டதோர்
தெவிட்டாத பேரின் பமே
சிந்தையற நின்றபடி சிவஞான முத்திவிளை
சித்துவிளை யாடு மரசே!
தொத்தறு மிருட்பகைமை நிர்த்தூளி பட்டிடச்
சுடர்காந்து ஞான மழுவே!
தொந்தமறு நிர்க்குண சுகாதீத மேசயஞ்
சோதிமய மான பரமே!

௪௦. உள்ள பொருள்

உள்ளபொரு ளுள்ளபடி யுள்ளதனி லுள்ளவிடம்
உள்ளுறவி லொன்றி, யதுவாய்
யுண்மையறி வின்பவொளி யொருகோடி
[பகலென்ன
வொளிவீசு தவ்வொளி யெலாம்,
தெள்ளறி வளித்தகுரு சின்மயா னந்தனே
தீபவழி பாடு னக்கே!
தேசுபெறு மோனத்தி லேகாந்த நிலைதந்த
தேசிக சிகா ரத்னமே!
அள்ளிக் கலந்தென்னை யன்பிற் கரைத்தபர
மாகாச மான விரிவே!
அகமாயை யந்திரச் சுழலினின் றடியனை
யகற்றிய தயா மூர்த்தியே!
துள்ளிக் குதித்துத் துயர்செய் தடங்காத
துஷ்டமன தைச்செற் றனை,
தொந்தமறு நிர்க்குண சுகாதீதமே சயஞ்
சோதிமய மான பரமே!

௪௧. குரு பரமன்

அன்னையி னருண்மிகுமெ னப்பனுய ரறிவினுக்
காயிரம் பகல் போன்றவன்
யானுமென் றாரய்ந் தடங்குவோ ருள்ளத்தி
லதுநா னெனத்திகழு வோன்.
சின்மயக் கனல்வீசிச் செய்யநல் லன்பர்பிணி
செற்றிடுஞ் செங்கண் வேலன்,
சிந்தனைக் கமுதினுந் தீஞ்சுவை யளிப்பவன்,
செகசீவ பர மொன்றெனத்
தன்னிலையி லுள்ளபடி சாந்தக்க திர்பரவு
சந்நிதிப் பெருமை யாளன்
தானன்றி வேறிலா ஸதஸத் விலாஸனுந்
தத்வமஸி மந்த்ர வடிவோன்,
என்றனித யத்திலே யெப்போது நீங்காம
லின்பநட மாடு முதல்வன்
ஏகனு மநேகனும் சிற்சக்தி போகனும்
இறைவனென் குருபரமனே!

௪௨. பலவழி

தத்வமஸி யென்பர்சிலர், தானடங் கிடவே
சமாதான மென்பர் சிலபேர்,
தானன்றி வேறில்லை யென்பர்சிலர், சாட்சியாந்
தனிநிலைய தென்பர் சிலபேர்,
சுத்தநிர்க் குணமென்பர் துரியநிலை யென்னுவார்;
சூனியம தென்பர் சிலபேர்
சொன்மன மடங்காத பொருளென்பர், [உலகெலாந்
தோன்றுவது மாயை யென்பார்,
சத்தென்பர், சித்தென்பர், தற்போத மற்றவழி
சார்ந்து தித்திக்கு மென்பர்;
தந்தை, தாய், காதலன் தனயனென் றுருகுவார்
சங்கீர்த்த னஞ்செய்கு வார்.
அத்துவித வத்துதா னதுவா யுணர்வார்கள்
அதுவன்றி யாது முணரார்.
அதுவென்று மிதுவென்றும், அவனென்று [மவனென்று
மவையென்று மான பரமே!

௪௩. மதமயக்கம்

மதமெமது மதமென்பர், மற்றொரு மதத்தை
மதங்கொண்டு தாக்கு வார்கள்.
மண்ணுலகில் வானரசை மாண்புறக் கொணர்வோமெம் [வோமெம்
மகிமையைப் பாரு மென்பார்.
சதமான பொன்னுடல மீவோம் சரண்புகுமின்
சாகாக் கலையி தென்பார்,
தவயோக மொன்றுமிலை, சடசக்தி மின்சாரந்
தான்வெல்லு முலகை யென்பார்,
அதஞ்செயும் புகைகுண்டு பீரங்கி யாட்சியே
அதிமனித ஞற்ற லென்பார்.
ஆருயிர்க ளஞ்சித் தமக்கடிமை செய்யவே
ஆர்ப்பாட்டஞ் செய்வ ரந்தோ !
இதயத் தடங்காம லென்னென்ன வோசெய்
தெமன்வாயில் வீழ்வ ருலகோர்.
இயல்பான தன்னிலே யிருந்துலக சாட்சியா
யென்றைக்கு முள்ள பொருளே !

௪௪. வேண்டுகோள்

எளியவர்கள் வயிறார வுண்ணவேண் டும், செல்வர்
இறுமாப்பு நீங்க வேண்டும்,
இடர்செய்யுஞ் சாதிமத பேதமறல் வேண்டுவோம்'
எல்லாரும் ஒருகு லம்போல்
வலியவர்கள் கொடுமையற வாழவேண்டும்; பொய்
வழக்குகள் பொறாமை வஞ்சம்
வறுமையிரு ளடிமையெனும் வார்த்தையே
[யில்லாமல்
வையஞ் செழிக்க வேண்டும்.
மெலியவரு பிணிதுயர்கள் அழியவேண்டும்; வாழ்க்கை
வீறுகொண் டோங்க வேண்டும்;
வீரக் கனல்வேண்டும், விடுதலை வேண்டும்;
வினைவேள்வி வெல்ல வேண்டும்;
நலியவரும் அசுரபல மொழியவேண்டும்; பாரத
நாட்டில்விண் ணரசு வேண்டும்.
நானிலமெலாம் பரவி நானென் றுளந்தோறு
ஞானநட மாடு மருளே!

௪௫. தன்னை யீதல்

எனையுனக் கின்பமா யீந்தன னிறைவனே
யேற்றுன்னை யென்னுள் வைப்பாய்
என்மாய விருளெலா மில்லாம லோடியான்
என்றென்று முன்ற னுடனே
இணைவுற் றருட்சுடர் குளித்தங் குலாவுவேன்
ஏகாந்த மோனத் திலே
இயற்கைவினை யாட்டையன் இச்சைவினை [யாடலென்
றெண்ணியான் பார்த்தி ருப்பேன்.
தனையீந்த வுயிரினுக் குனைமுற்று மீந்தருள்
சதாசகஜ சாந்த சுகனே!
தர்க்கவா தங்களைத் தாண்டியொளிர் உண்மையே
தாயிற் றயா மூர்த்தியே,
அனைவர்க்கும் எளியனே, யாதினும் அரியப்ரம்
மாகார சக்தி மயனே,
அன்பொடுமொ ரணுவுமெனை யகலாத நேயனே
ஆருயி ரினும் பிரியனே!

சுகா. ஜோதி மழை

சொல்லரிய விண்ணின்று 'ஜோ' வெனப் பொழிகுதே
ஜோதியா னந்த மழையே !
துரியவள நாட்டரசு தோன்றுதென் னுள்ளே
சுதந்தரப் பொற் கோயிலாய்,
எல்லையறு முலகெலாம் இதயவிரி வானதோர்
ஏகரச மாய்க் காணுதே ;
எங்கெங்கு பார்த்தாலு மென்னையே பார்க்கிறேன்
இரண்டுமொன் றென்ப தறியேன் !
அல்லலறு மமரநிலை யானென்னு ளமருநிலை,
அறிவான பெரிய நிலையே ;
ஆடா விளக்கென ஸஹஸ்ரார மணிமாட
மமைதியாய் நின்ற நிலையே ;
வெல்லரிய தன்னாட்சி பெற்றநிலை, வெற்றிநிலை
வேதநிலை, போத நிலையே ;
வேதாந்த சித்தாந்த வேறுபா டற்றநிலை
விரவிடுந் துரிய சுகமே !

[சுகா]

௬௭. இன்பம்

என்னைக் கொடுத்ததுவு முன்னைக் கொடுத்தனை ;
யெனதியா னென்ப தினியேன்?
என்னுயிர்க் காதலா வுன்னிளம் புன்னகையி
லின்னுயிர் குளித்து வந்தேன்.
பொன்னை நெருப்பினிற் பொலிவேற வாட்டிடும்
பொற்கொல்லன் போற்சீ வனைப்
புவிமாயை தன்னிலே வாட்டிமாற் றேற்றியுன்
பூங்கழற் கணியாக் கினை,
உன்னைவிட் டாலெனக் குயிருமிலை யுடலுமிலை
யுலகுமிலை யுறவு மில்லை ;
ஒன்றுமிலை பலவுமிலை யொளிர்திருச் சக்திடா
லொன்றுபல வான பொருளே.
அன்னைமடி விளையாடு மருமைக் குழந்தைபோ
லடிமலரில் விளையா டவே
அங்கிங் கெனாதபடி யெங்குமென் னின்பமா
மானந்த மான சிவனே!

சஅ. காட்சி

கார்கொண்ட வள்ளலே, கதிர்கொண்ட சோதியே,
கடல்கொண்ட கருணை விரிவே,
கண்கொளா மின்வீசுங் கனிமுறுவ லே,என்
கருத்தினைக் கொண்ட கவினே!
சீர்கொண்ட மார்பே, செயங்கொண்ட கையே,
சிவங்கொண்ட ஞான வளமே!
சித்திகளெ லாங்கொண்ட முத்தியே, சத்தியருள்
திவ்ய சிற்காந்த ஒளியே,
யார்கண்ட போதிலும் அன்புமய மென்றுட
னறிந்தன்பு செய்வ ருன்னை,
அவனிமிசை யத்யாத்ம வாழ்வினை யனைவர்க்கும்
அருளூற்றி நீ வளர்ப்பாய்,
பார்கொண்ட சீவனிற் குணபந்த மில்லாப்
பரங்கொண்ட சுக மூக்குவாய்;
பசுபாச வினைநீக்கிப் பதியன் பளித்தாண்ட
பகவனே குரு பரமனே!

௨௪. புதுப்பிறவி

புதுப்பிறவி தந்தாய், புதுத்திற லளித்தாய்,
புதல்வனென் றென்னை யாண்டாய்;
பூராய மாகவே புவியினை யறிந்துன்
புகல்பெறச சிந்தை தந்தாய்;
எதுவுமிடை நில்லாம லென்னையாட் கொண்டாயுன்
னிச்சையினை யென்னுள் வைத்தாய்;
இரண்டற வெனைக்கலந் துன்னின்ப மெனதாக்கி
எனையே யெனக்களித் தாய்.
வெதுவெதுப் பாகவுன் சிற்சக்தி வெள்ளம்
விரைந்தெனுட் சுழலு தையே;
வெற்றின்பம் சிற்றின்பம், இந்தசிற் சுகமே
விருப்பெனக் கெப்போ துமே!
இதுபோது மப்பனே, எல்லார்க்கு மிதனையே
ஈந்திடுந் தொண்ட னானேன்,
இனிவேறு நினைவில்லை, வினையில்லை, மொழி
யில்லை
எல்லாமு மின்ப மயமே!

ருo. சுத்தமும் சக்தியும்

அருளோங்கு, மொளியோங்கு, மறிவோங்கு, மானந்தம்
அருவியென வாழ்வி லோங்கும்.
அத்யாத்ம சித்திக ளனைத்துமோங் கும், ஆற்றல்
அளவற் றிலங்கி யோங்கும்.
பொருளோங்கும், புவிதரும் போகபோக் கியமோங்கும்,
புண்ணியப் புகழு மோங்கும்.
புலமையெழி லழகுகலை பொருள்வளமை யோங்
[கிடும்,
பொங்குமனை யின்ப மோங்கும்.
இருளோங்கு மடமைத் துயர்வறுமை யின்னல்க
ளில்லாம லோடி மறையும்.
எண்ணிய செயல்வெற்றி யிளநகைச் சுடரோங்கு
மினியபொது நலமோங் கிடும்.
திருவோங்கு மங்களச் சிவமோங்கு பேரின்பச்
செல்வ மெல்லா மோங்கிடும்.
தியானமலர் தூவியுள் ளன்புசெயு மடியார்க்கு
ஜெயசுத்த ஓம்சக்தி ஓம்!

பேரின்பம்

௫௧. மனோ ஜயம்

காரிருள் வானம் பளீரெனக் காந்திடுங்
கடுமின்னல் வெறி நகையுடன்
கடகடென ஆழியிடி யஞ்சக் கடும்புயற்
கடியதே ரூர்ந்து வருவாய்!
தேர்மதி விவேகமொடு சித்தமும் மனமுந்
திறல்கொண்ட ப்ராணன் முதலாஞ்
சேவக ரெலாருமே திமிர்கொண் டலைவார்
செருக்குடன் வணங்க மாட்டார்,
பேர்செய்யுங் காமாதி ராக்ஷஸப் புல்லரென்
புத்தியைச் சிறைகொண் டனர்,
பொருதிவர் மனக்கேட்டை தன்னையிப் போதுநீ
பூண்டுட னழிக்க வேண்டும்.
சீர்பெருகு முன்றனரு ளாட்சியே யென்னுட்
செழித்துநீ டோங்க வேண்டும்.
சிறியனே னுன்கருணை யல்ல தொரு திக்கிலேன்
ஜெயசுத்த ஓம்சக்தி ஓம்!

௫௨. கடவுட் காந்தம்

பிறப்பிலே யென்னுட் பிறந்தசிற் காந்தமே,
பெரியவுல கத்தி னியல்பைப்
பிள்ளையாம் போதிலே காட்டிப் பிழைக்கவழி
பேசிய கவிக் காந்தமே !
மறப்பிலே கண்மூடி மாயைவாய் வீழாது
மனதைக் கவர் காந்தமே !
மாசைக் களைந்தெனது வாய்மையை விளக்குகிற
மாதவ வொளிக் காந்தமே !
இறப்பிலாச் சிவஞான சித்திக்கென் னுள்ளே
எழுந்திரு வருட் காந்தமே !
இரவுபக லற்றவிட மென்னே டியானது
மெல்லையறு மேகாந் தமே !
சிறப்பிலே யுள்ளமாய்ப் பொதுவிலே யுலகமாய்த்
திகழ்பரம சிவ காந்தமே !
தியானத்தி லுணர்வாகு மோனமெய்க் காந்தமே !
ஜெயசுத்த ஓம்சக்தி ஓம் !

௫௫. வரம்

ஆகாய மீன்களைப் பகலிலே யந்தகனும்
அளவிட் டுரைக்க வைப்பாய் ;
ஆகாத முடவனைய மடர்கான மலைதாண்டி
யப்புறஞ் செலவி டுப்பாய் ;
பாகாய செந்தமிழ்ப் பண்மொழிய வூமைக்கும்
பக்குவந் தந்துதவு வாய் ;
பாராளுஞ் செல்வரும் பார்த்ததி சயிக்கவே
பஞ்சையைப் பதவி சேர்ப்பாய் ;
வாகாய திறலீந்து மெலியவரை வாகைபெறு
வலியவர்க ளாக்க வல்லாய்,
வறள்வனுந் தரமண்ணில் வளமையுண் டாக்கு [வாய்
வரமுனக் கரிய துண்டோ ?
தேகாதி யிடர்தாண்டித் தேகியென யானமரச்
சிற்சுகோ தய மருளுவாய்,
சென்மவா தனையிலாத் திருவெனக் கீகுவாய்,
ஜெயசுத்த ஓம்சக்தி ஓம் !

பேரின்பம்

ருச. ஐக்யானுபூதி

உன்சக்தி யென்சக்தி யுன்னன்பெ னன்பதாய்

உன்றனுணர் வென்ற னுணர்வாய்

உன்யோக மென்யோக முன்சித்தி யென்சித்தி

யுன்னுட லென்னு டலாய்,

உன்னெண்ண மென்னெண்ண முன்னுயிர்ப் பென்
[னுயிர்ப்

புன்னூறுதி யென் னூறுதியாய்,

உன்னுருவ மென்னுருவ, முன்னருவ மென்னருவ,

முன்னழகென் பொன்னழக தாய்,

உன்காட்சி யென்காட்சி, யுன்சாட்சி யென்சாட்சி,

யுன்னமைதி யென்னமைதி யாய்,

உன்விளக் கம்மென் விளக்கமாய், உரையற்ற

உன்மௌன மென்மௌன மாய்

உன்னுண்மை யறிவின்ப மென்னுண்மை யறிவின்ப

முன்கோயி லென்னுள்ள மாய்,

உள்ளபடி யுனையொன்றி நீயாயி ருக்கவருள்

ஓம்சுத்த ஓம்சக்தி ஓம்!

[ருச]

௫௫. ஞான வாராதனை

ஆயிர விதழ்மலருன் ஆசனம தாக்கினேன்
அறிவொளி விளக்கேற்றி னேன்
அருளறிவி லூறிவரு மன்புப் பெருக்கிலே
அழகவனை நீராட்டி னேன்...
வாயணுக வொண்ணாத மந்திரஞ் சொல்லியென்
வாணனை யர்ச்சித் தனன்
வாக்கின்வா மருள்கின்ற பாநாத வாணியின்
வனமலர் மாலை வேய்ந்தேன்.
தூயமன வணிகளைச் சூட்டினேன்; ஆர்வமே
தூபமாய்க் காட்டி நின்றேன்.
சுகவுணர்வி லென்னையே துய்க்குமுணா வாக்
[கினேன்
சொரூப சாட்சாத் காரமே !
ஆய்ந்தோ ரிடங்கற்ற ஞானவா ராதனையை
யனவா தமுஞ்செய் குவேன்
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே !

பேரின்பம்

ஶ்ரீ. பூரணாநந்த குரு

உலகெலாங் கோயிலா யொவ்வொருவ ருள்ளமும்
உயிரிறைவன் சந்நிதிய தாய்
உள்ளன்பு மலர்களா யுண்மைதிரு மந்த்ரமா
யுயர்பூஜை தியான மாகப்
பலசாதி மதமற்ற பொதுவான காட்சியாம்
பரமாத்ம னேமூர்த்தி யாய்ப்
பாரின்விளை யாடலைப் பற்றறப் பார்ப்பதே
பழுதறு திருத்தொண்ட தாய்
இலகுமுப சாந்தமே யிதயப்ர சாதமா
யியல்பாகு மின்பம் வரமாய்
எவர்புகழு மிகழ்வுமே யெண்ணும லுண்ணுடி
யெப்போது மினிதி ருக்கும்
பொலிவுமிகு பரிசுத்த முத்தசம ரசமான
போதநிலை யின்போ கமே
புந்திமகி ழுறவந்து தந்தசிவ மேபரம
பூரணா னந்த குருவே!

[ஶ்ரீ]

௬௭. நலம் வேண்டல்

நல்லவர் திருக்கூட்டம் ஓங்கவேண்டும், உலகில்
ஞானவொளி வீச வேண்டும்,
நாடெலாங் கல்வி,கலை, செல்வத் தொழில், [வளமை
நாடோறு மோங்க வேண்டும்,
பொல்லாத கோள்பொய் பொறாமைநோ யுடன்மதப்
போராட்ட மொழிய வேண்டும்,
பூமியை யிரத்தகள மாக்கிடு மரக்கர்குலம்
பூண்டோடு மாற வேண்டும்,
எல்லாரும் சரிநிகர் சமானசன் மார்க்கராய்
இன்புற்று வாழ வேண்டும்,
இன்சொல்லு மீகையு, மிரக்கமுந் தூய்மையுட
னிகவாழ்வி லோங்க வேண்டும்,
வெல்லவேண்டும் வாய்மை ; வீரவிடு தலைவேண்டும்.
விஞ்ஞான மோங்க வேண்டும்,
வேதாந்த முக்தியும், சித்தாந்த சக்தியும்
விரவவரு பரம சிவமே !

பேரின்பம்

ரு௮. அருளாக்கியம்

நீயின்றி யானில்லை, நினைவில்லை, யுணர்வில்லை,
நிலையில்லை, கலையு மில்லை.
நின்னடி யலாமலொரு நிழலில்லை, இதுவுண்மை
நின்னருளி லாது வாழேன் !
ஞாயிறில் லாதுநல் லொளியில்லை, சூடில்லை,
ஞாலத்தில் வளமை யில்லை.
நல்குவா னில்லாது பல்குயிர்க் குலமில்லை,
நாடில்லை வீடு மில்லை.
ஆயாவுன் னன்பின்றி என்பிலா வுயிர்போலிவ்
வகநெருப் பில்வா டுவேன்,
அம்மையப்பா வுன்னை யல்லாது வேறெனக்
கபயங் கொடுப்ப தெவரே !
தீயினி லிரும்புசெந் தீயாத லெனவுனைச்
சேர்ந்துநீ யாக வருளாய்,
தெள்ளிய சுகாதீத வெள்ளமே, யுள்வளருந்
திவ்ய ஞானப் பிழம்பே !

[ரு௮]

௫௬. போற்றி

எல்லாரு மின்புறுத லென்னின்ப மாக்கினை
'எனதியா னென்ப தறவே,
யென்னுட் கலந்தவா றெங்கணும் விளங்கினை
யியல்பா யிருந்த படியே ;
தொல்லுலக முன்னுணை யாடலாய்த் தோற்றினை
தோற்றியதை மாற்றி மாற்றித்
தொழில்க ளெண்பதுகோடி சோர்வற வியற்றியுந்
தொழிலறு சமர்த்த னாய் ;
சொல்லரிய துரியமெய் விண்ணொளிக் கப்பாற்
றுலங்கிடும் வெட்ட வெளியே,
துதிக்கத் துதிக்கத் திதிக்குமுத் தமிழெனச்
சொக்குஞ் சுகப் பெருக்கே,
இல்லையென் பாருளு மிருக்கிறே னீங்கென்னு
மெல்லையறு தில்லை யறிவே !
எச்சமய மும்பணிந் தேத்தரிய பொதுநடத்
தெந்தையே போற்றி போற்றி !

௯௦. வாழ்த்து

போக்குவர வற்றபரி பூரணப் பொருளையே
பொருளென்னு மன்பர் வாழ்க!
பொய்யடிமை யில்லாத மெய்யடியர் வாழ்கவே!
புண்ணியத் தொண்டர் வாழ்க!
வாக்கமுதி ஞலிறைவன் வான்புக ழிசைக்கின்ற
வரகவி மஹான்கள் வாழ்க!
வன்புலனை வென்றுமன மொன்றியித யத்திலே
வளர்தியான யோகர் வாழ்க!
நீக்கமறு சஹஜநிலை நின்றஞா னிகள்வாழ்க!
நித்தியச் சித்தர் வாழ்க!
நிஜதுரிய மலையிலே நிலவுநின் மலர்வாழ்க!
நிருவி கற்பர் வாழ்கவே!
தாக்கறப் பலகோடி யுலகெலாந் தாங்குந்
தயாபரன் கருணை வாழ்க!
தன்னையென் னுள்வைத்த சிவமோன குருவாழ்க
சச்சிதா னந்தன் வாழ்க!

ஓம் சுத்த சக்தி